# போஷாக்கின்மையால் வாடும் மாணவர்களுக்கு

## வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் நிதியுதவி!

### துரிதகதியில் வளர்ச்சியுறும் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு கல்லூரி அதிபர் பாராட்டு!



துரிதகதியில் வளர்ச்சியடைந்து இன்று ஒரு இலாப நோக்கற்ற ஸ்தாபனமாக கனடாவில் பதிவு செய்யப்பட்டிருக்கும் 'வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்' தமிழ் மக்களுக்கான சேவையில் இப்பொழுது உயர்ந்து நிற்கிறது. கடந்த காலங்களில் தாயக துயர் துடைப்பு, தமிழர் புனர்வாழ்வுக்கான நிதியுதவி என தமிழர் சமுதாய நல்லெண்ண ஒத்துழைப்புக்களில் பாரிய பங்களிப்பை அதன் ஆரம்பகால நடவடிக்கையாக மேற்கொண்டிருந்தமை அனைவரும் அறிந்ததே.

கடந்தவருடம் டிசெம்பர் 20ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட நடப்பு வருட நிர்வாக சபையின் தலைவர் திரு சி. இளஞ்செழியன் அன்றைய தினம் தலைவர் பதவியை ஏற்று ஆற்றிய உரையை 'நம்நாடு' பத்திரிகையில் நாம் எழுதிக் கொண்டது போல "தூர நின்று பார்ப்பதைத் தவிர்த்து நேரில் வந்து பணியாற்ற வேண்டும். அவ்வாறான ஒத்துழைப்பின் மூலமே நமது மண்ணின் துயர் துடைக்கப்பட வேண்டும்" என்ற அவரது அன்றைய கூற்றுக்கு ஒப்ப சங்கத்தின் செயற்பாடுகள் இன்று வியக்க வைக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது.

கடந்த சனிக்கிழமை யூன். 20. 98 தமிழீழச் சங்க மண்டபத்தில் நடந்த விசேட பொதுக் கூட்டம் இதற்கு மேலும் சான்று பகர்கிறது. என்றும் இல்லாதவாறு பெரும் தொகை மக்களோடு நடந்த இந்தப் பொதுக்கூட்டத்தில் வைத்து வேலணையில் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவளிக்கும் ஒரு நடவடிக்கையின் முதல்பணியாக இலங்கைப் பணத்தில் ரூபா 50,000 அனுப்பிக்கொள்ள சபையில் ஒப்புதல் பெற்று உடனடியாகவே $1175ஐச் சங்கம் சேர்த்துக் கொண்டது. இடப்பெயர்வு, மலேரியா, நெருப்புக்காய்ச்சல் நோய்களினால் பாதிக்கப்பட்ட கல்லூரியின் தற்போதைய மாணவர்களுக்கு போஷாக்குணவு வாங்குவதற்கு நிதியுதவி செய்யுமாறு கேட்கப்பட்ட அவசர வேண்டுகோளுக்கிணங்க இந்த நிதி சேகரிக்கப்பட்டு மிக விரைவில் அனுப்பப்பட இருக்கிறது.

மேலும் இச்சங்கத்தின் இவ்வருடச் சிறப்புப் பணியாக வருட ஆரம்பத்தில் வேலணையில் கல்லூரி காவலாளியாக இருந்து இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட நாகராஜா ஆனந்தராஜாவினது தாய்தந்தையருக்கு சங்கம் கொடுத்த 860 டொலர்களும் வங்கியில் புத்தகத்தில் வைப்பு நிதியாக 30,000 ரூபாவும், நடந்த இறுதிக் கிரியைகளுக்கான செலவாக 7500ரூபாக்களுமாக வழங்கப்பட்டிருப்பதாக கல்லூரி அதிபர் திரு. கு. கணேசலிங்கம் அவர்கள் அனுப்பிய கடிதம் சபையில் வாசிக்கப்பட்டது.

மேலும் இப்பழைய மாணவர் சங்கம் துரித கதியில் வளர்ச்சி பெற்று நடப்பு வருட நிர்வாக சபையால் புதிய அங்கத்தவர்கள் பலரை தன்னகத்தே பதிவு செய்து கொண்டிருக்கிறது. தாமாகவே வந்து பதிவு செய்யும் அங்கத்தவர்கள் தொகை இவ்வருடம் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவில் ஒரு இலாபநோக்கற்ற சங்கமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக விண்ணப்பித்திருந்தும் இவ்வருட ஆரம்பத்தில் எடுத்த நீண்ட முயற்சியின் பின்னர் கிடைத்த சங்கத்தின் பதிவானது கனடிய நாட்டில் ஒரு சிறந்த நிலைப் பாட்டில் சங்கம் இயங்க வழி வகுத்திருக்கிறது. இப்படியாக சங்கத்தின் வளர்ச்சி பற்றி பலர் எடுத்துரைத்துக் கொண்டார்கள். அதேநேரம் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத் தலைவரும் வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவருமான திரு. சி. திருச்செல்வம் அங்கு உரையாற்றுகையில் ஒரு பொது வேலைத் திட்டத்தில் இயங்குவதாயின் தீவுப்பகுதி பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட தாமும் தயாராக இருப்பதாக கூறியமை குறிப்பிடத்தக்கது.

சங்கத் தலைவர் சி.இளஞ்செழியன் உரையாற்றுகையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சங்கம் கண்ட வளர்ச்சி, கல்லூரி அதிபரது வேண்டுகோள்களை துரிதகதியில் சங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள், மண்ணின் துயர் துடைப்பு விஷயமாக ஏற்கெனவே வருடாவருடம் எடுத்துவரும் நடவடிக்கைகளை தொடர வருகின்ற சங்கப் பணிகள், ஒன்றுகூடல் கலை விழா என பல செயற்பாட்டுப் பணிகள் சங்கத்தின் இலட்சியமாக இருக்கிறதென எடுத்துரைத்தார். செயலாளர் ச.தயாளன் அவர்கள் நன்றியுரை கூறினார்.

-'நம்நாடு' நிருபர் இலக்கியா.